MCOP.No. 58/2023

Date : 29.01.2026

Witness Name & Rank – பாலசுப்பிரமணியம் - PW1

**சாட்சி அழைக்கப்பட்டு 2வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்**

1. இந்த வழக்கின் விபத்தானது எங்களது ஊருக்கு செல்லும் கிராமத்து சாலையில் நடந்தது என்றால் சரிதான். விபத்தானது இரவு 8.30 மணிக்கு நடந்தது என்றால் சரிதான். நான் தான் எனது கவனக்குறைவால் வாகனம் வருவதை கவனிக்காமல் விபத்தை வரவழைத்துக் கொண்டேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள முதல் தகவல் அறிக்கையின் படி நானும் தாமோதரனும் பேசிக் கொண்டிருந்தபோது விபத்து நடந்ததாக சொல்லப்பட்டுள்ள நிலையில் நான் பேசிக் கொண்டிருந்ததால் எங்களது கவனக்குறைவால் தான் விபத்து நடந்தது என்றால் சரியல்ல,
2. நான் இந்த வழக்கில் சொல்லி உள்ளபடி மேற்படி விபத்தால் எனக்கு நிரந்தர ஊனமோ வருமான இழப்போ எதுவும் இல்லை வழக்கிற்காக மிகைப்படுத்தி சொல்லி உள்ளேன் எனவே எனது மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல நான் வழக்கில் சொல்லியுள்ளபடி டையிங் வேலை செய்து வருவதாகவும் மாதம் ரூ. 20 ஆயிரம் சம்பாதிப்பதாகவும் சொல்லியுள்ளதை காட்ட ஆவணம் எதுவும் இல்லை எனவே எனக்கு நிரந்தர வருமானம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு விபத்தை ஏற்படுத்தியாக சொல்லப்படும் 1ம் எதிர்மனுதாரர் மீது இது வரை இறுதி அறிக்கை எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை எனவே அவரது கவனக்குறைவால் விபத்து நடக்கவில்லை என்றால் சரியல்ல. எனது மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/–)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.